## நமது இரு மாநிலங்களும் இணைந்து நின்று

# நமது பண்பாட்டு உறவுகளைப் போற்றுவோம்!

### கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி!



**சென்னை, மே 25-**

**கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "நமது இரு மாநிலங்களும் இணைந்து நின்று நமது பண்பாட்டு உறவுகளையும் பொதுவான இலக்குகளையும் போற்றுவோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கேரள முதலமைச்சரும் எனது அன்புத் தோழருமான பினராயி விஜயன் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள்.

முற்போக்கான அரசு நிர்வாகத்தின் மீதான தங்களது அர்ப்பணிப்பும், கூட்டாட்சியியல் மற்றும் மதச்சார்பின்மை மீதான நமது உறுதிப்பாடும் தமிழ்நாடு - கேரள உறவினை வலுப்படுத்துகின்றன.

நமது இரு மாநிலங்களும் இணைந்து நின்று நமது பண்பாட்டு உறவுகளையும் பொதுவான இலக்குகளையும் போற்றுவோம்! தாங்கள் நீண்டகாலம் உடல்நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ வேண்டுமென வாழ்த்திட விழைகிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.5.2025) புதுதில்லி, சாணக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா, திருச்சி சிவா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஜம்மு காஷ்மீர் மாநிலம், பெஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டு, புதுதில்லி, எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி டாக்டர் பரமேஸ்வரன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.5.2025) மருத்துவமனைக்கு நேரில் சென்று சந்தித்து உடல் நலம் விசாரித்தார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா, ஆ. ராசா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் மற்றும் டாக்டர் பரமேஸ்வரன் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# கடலூர் கிழக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

*கடலூர், மே 25-*

*கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (26.05.2025 - திங்கட்கிழமை) நடைபெறும் என்று மாவட்ட தி.மு.க. செயலாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*



*முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கினங்க, துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (26.05.2025 - திங்கட்கிழமை) காலை 09.00 மணியளவில் வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்மந்தமாக ஆலோசனை வழங்கப்பட உள்ளது மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடுவது குறித்து விவாதிக்கப்படுகிறது.*

*எனவே இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்:*

*1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா*

*2. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்பந்தமாக*

*3. கழக ஆக்கப் பணிகள்*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.*

## 'எய்ம்ஸ்' மருத்துவமனையில் டாக்டர் பரமேஸ்வரனைச் சந்தித்து நலம் விசாரித்தார்!

# புதுடெல்லியில் விருந்தினர் இல்லம் - அலுவலர் குடியிருப்பு கட்டுமானப் பணிகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**புதுடெல்லி, மே 25–**

**புதுடெல்லியில் நடைபெற்று வரும் விருந்தினர் இல்லம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டுமானப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், பெகல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டு புது டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் டாக்டர் பரமேஸ்வரன் அவர்களை முதல்வர் அவர்கள் சந்தித்து நலம் விசாரித்தார்.**

புதுதில்லியில் நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.5.2025) புதுதில்லி சென்றடைந்தார்.

பின்னர், காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களையும், மக்களவை எதிர் கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களையும் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து, புதுதில்லி, சாணக்யபுரியில் தமிழ்நாடு அரசின் சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் விருந்தினர் இல்லம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுதில்லி, சாணக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தின் பழைய கட்டடங்களை முழுவதுமாக இடித்து மறுமேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 26.7.2024 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக, வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தில் 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அடிக்கல் நாட்டினார். அதனை தொடர்ந்து அங்கு கட்டுமான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப்புதிய கட்டடம் மிக முக்கிய பிரமுகர் தொகுதி, விருந்தினர் மாளிகை தொகுதி மற்றும் அலுவலர்கள் குடியிருப்புத் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்கி, 3 அடித்தளங்கள், தரைத்தளம் மற்றும் 7 மேல் தளங்களைக் கொண்டதாகவும், மொத்தம் 3 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது.

**டாக்டர் பரமேஸ்வரனை சந்தித்து நலம் விசாரித்தார்!**

கட்டுமான பணிகள் ஆய்வு மேற்கொண்ட பின்னர், ஜம்மு காஷ்மீர் மாநிலம், பெஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டு, புதுதில்லி, எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி டாக்டர் பரமேஸ்வரன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனைக்கு நேரில் சென்று சந்தித்து உடல்நலம் விசாரித்தார்.

இந்த நிகழ்வுகளின்போது, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ.ராசா, திருச்சி சிவா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் ஆகியோர் உடனிருந்தனர்.

## டாஸ்மாக் – அமலாக்க விசாரணைக்கு உச்சநீதிமன்றம் தடை! எடப்பாடி பழனிச்சாமி மௌனம் –

# டெல்லி எஜமான் கோபித்துக்கொள்வார் என்ற பயமா?

### தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

சென்னை, மே 25-

டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்திருப்பதை பற்றி ஏன் எடப்பாடி பழனிசாமி பேசாமல் இருக்கிறார்? டெல்லி எஜமான் கோபித்து கொள்வார் என்ற பயமா? என்று தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும், எம்.பி.யுமான தயாநிதி மாறன் அறிக்கையில் கேள்வி கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-



மருதமலை திரைப் படத்தில் கைதியை தப்பவிட்ட வடிவேலுவை பார்த்து அர்ஜுன், "என்னென்னமோ பேசுவியே இப்ப பேசுடா... எதாவது பேசுடா" என்ற காமெடி தான் இன்றைக்கு நினைவுக்கு வருகிறது. எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு தெரி வித்து கருத்து சொல்லி வரும் எதிர் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்திருப்பதை பற்றி ஏன் பேசாமல் இருக்கிறார்? டெல்லி எஜமான் கோபித்து கொள்வார் என்ற பயமா? ED, தன் வீடு தேடி வந்து விடும் என்ற அச்சமா? "அமலாக்கத்துறை சோதனை குறித்து முதல்வர் ஸ்டாலின் மவுனமாக இருப்பது ஏன்" எனக் கடந்த 17ம் தேதி வீராவேசமாகக் கேட்ட சூராதி சூரர் யார்? அந்த சூனா பானாவைக் கண்டா வரச் சொல்லுங்க...

கையோடு கூட்டி வாருங்க. பொய்களையும் அவதூறுகளையும் வைத்தே அரசியல் செய்யும் 'பச்சைப் பொய்' பழனிசாமி உச்சநீதிமன்றத்தின் உத்தரவைக் கண்டு, வெட்கித் தலைகுனிய வேண்டும்! பாஜகவின் அடிமையாக வாழ்ந்து, அதிமுகவை பாஜகவின் கிளைக் கழகமாக மாற்றி, கீழ்த்தரமான அரசியல் செய்து வரும் பழனிசாமியின் அருவருக்கத்தக்கப் பித்தலாட்ட அரசியல் உச்சநீதிமன்றத் தீர்ப்பால் கிழித் தெறியப்பட்டிருக்கிறது. பழனிசாமி பதில் சொல்லுவாரா... பம்மி கிடப்பாரா?

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. அறிக்கையில் கூறியுள்ளார்.


